# கடன் வாங்குவதில் கட்டுப்பாடுடன் இருங்கள்

நிதியியல் கல்வி வாரம்
ஜூன் 5-9, 2017

## சிந்தித்து கடன் வாங்குங்கள்

வருமானம் ஈட்டக்கூடிய மற்றும் மதிப்புக் கூட்டக் கூடிய சொத்துக்களில் முதலீடு செய்வதற்கு உங்களால் திருப்பி செலுத்த முடிந்த அளவிற்கு கடன் வாங்குங்கள். உதாரணமாக :

- வீடு வாங்குவதற்கான அடமானக் கடன்
- குழந்தைகளின் உயர் கல்வி தேவைக்கான கல்விக்கடன். இணைய தளம் மூலம் விண்ணப்பிக்க வித்யாலக்ஷ்மி வலை தளத்தை பார்க்கவும்.

  **(https://www.vidyalakshmi.co.in)**
- உங்களின் வியாபார கனவை நனவாக்க குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்க்கான கடன் வாங்க உத்யமி மித்ரா வலை தளத்தை பார்க்கவும்.

  **(https://udyamimitra.in)**



## கடன் வாங்கிய பின்

- திருப்பி செலுத்த வேண்டிய தவணைகள் எதையும் தவறவிடாதீர்கள்.
- திருப்பி செலுத்துவதில் நேரும் காலதாமதம் உங்களின் கடன்-நம்பகத்தன்மை வரலாற்றையும் (credit history) / கடன்-நம்பகத்தன்மைக்கான மதிப்பெண்களையும் (credit score) பாதிக்கும்.
- காலதாமதம் நேரும் எனில் தவறாமல் உங்கள் வங்கி அதிகாரியிடம் தெரிவிக்கவும்.
- உரியநேரத்தில் உங்கள் கடனை திருப்பி செலுத்துவது உங்களின் கடன்-நம்பகத்தன்மையை அதிகரிக்கும்.

## கடன்–நம்பகத்தன்மைக்கான மதிப்பெண்கள்

உங்களின் கடன்-நம்பகத்தன்மை வரலாற்றையும் மற்ற பிற சார்ந்த விஷயங்களையும் கொண்டு உங்களின் கடன்-நம்பகத்தன்மைக்கான மதிப்பெண்கள் கொடுக்கப்படும்.

மதிப்பெண்கள் அதிகமானால் உங்களின் நம்பகத்தன்மையும் அதிகரிக்கும், கடன் பெறுவது எளிதாகும்.




## இலவச கடன்–தகவல் அறிக்கை

தனிநபர்கள் கடன் வாங்கி இருந்தால், பின்வரும் நிறுவனங்களில் ஏதேனும் ஒன்றிடம் இருந்து உங்களின் இலவச கடன் தகவல் அறிக்கையை வருடத்திற்கு ஒரு முறை (ஜனவரி – டிசம்பர்) பெற்றுக் கொள்ளலாம்.

1. ட்ரான்ஸ்யூனியன் கிரெடிட் இன்போர்மேஷன் ப்யூரோ (இந்தியா) லிமிடெட்
2. இக்விபேக்ஸ் கிரெடிட் இன்போர்மேஷன் சர்விசஸ் ப்ரைவேட் லிமிடெட்
3. எக்ஸ்பிரியன் கிரெடிட் இன்போர்மேஷன் கம்பெனி ஆஃப் இந்தியா ப்ரைவேட் லிமிடெட்
4. சி ஆர் ஐ எஃப் ஹை மார்க் கிரெடிட் இன்போர்மேஷன் சர்விசஸ் ப்ரைவேட் லிமிடெட்

நிதியியல் கல்வி ● வளமைக்கான வழி

ECD

नारतीय रिज़र्व बैंक RESERVE BANK OF INDIA

**நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத்துறை**
**இந்திய ரிசர்வ் வங்கி**
**www.rbi.org.in**